தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 10, பிரமோதூத–திருவள்ளுவர் ஆண்டு–2021

1990, ஏப்ரல் 23, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.''

இறுதிக் காலத்தில் பார்த்துக் கொள்வோம் என்று காத்திராமல் அறம் செய்ய வேண்டும். அதுதான் நாம் மறையும் காலத்திலும் அழியாத துணையாக நிற்பது.

1. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 5760 மற்றும் 6633 சற்றுப் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

தூத்துக்குடித் தாலுக்காவைப் பிரித்தல்

8121.* **திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தூத்துக்குடித் தாலுக்காவை இரண்டாகப் பிரிப்பதற்கு உரிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகரைச் சுற்றிலும் ஹார்பர் ப்ராஜக்ட், அனல் மின்சார நிலையம், ஸ்பிக் நிறுவனம் ஆகிய பெரிய தொழிற்சாலைகளும், அது தவிர மற்ற சிறிய தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போன்று தூத்துக்குடி இப்போது சிதம்பரனார் மாவட்டத்தின் தலைநகரமாக இருப்பதால், ஜனத்தொகை அதிகரித்துள்ளது. ஆகவே, தூத்துக்குடி தாலுக்காவை நிர்வாக வசதிக்காக இரண்டாகப் பிரிக்கின்ற எண்ணம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை என்று ஏற்கெனவே தெரிவித்து விட்டேன். விளக்கத்திற்காகச் சொல்கிறேன். சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள தூத்துக்குடி வட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு செயற்குறிப்பு இல்லை, சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள தூத்துக்குடி வட்டத்தில் 4 உள் வட்டங்கள்—ஃபிர்க்காக்கள் மட்டுமே உள்ளன. 4 உள் வட்டங்களே கொண்ட இவ் வட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டிய அவசியம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. தொழிற்சாலைகள் இருக்கக் கூடும். ஆனால், ஃபிர்க்காக்கள் 4 தான். இரண்டாவது, மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் காரணமாக தற்போதுள்ள வருவாய் நிர்வாக ஆட்சி வரம்பில் எவ்வித மாற்றமும் செய்ய 30—6—1991 வரை தடையாணை உள்ளது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி தாலுக்காவும், ஸ்ரீவைகுண்டம் தாலுக்காவும் மிகப் பெரிய தாலுக்காக்கள். ஆகவே, இரண்டு தாலுக்காக்களிலும் சில கிராமங்களையாவது இணைத்து, மூன்றாவது ஒரு புதிய தாலுக்காவை அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : இப்போது அரசு .முன் வருவதாக உத்தேசம் இல்லை.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தாலுக்காவை இரண்டாகப் பிரிப்பதற்கு அடிப்படை விதிமுறைகள் யாவை என்றும், தமிழ்நாட்டில் எந்தெந்தத் தாலுக்காக்கள் இப்போது பிரிக்கப்பட இருக்கின்றன என்ற செயற்குறிப்பையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : இப்போது தாலுக்காக்களைப் பிரிக்கின்ற உத்தேசம் இல்லை என்று ஏற்னவேயும் தெரிவித்து இருக்கிறேன். இப்போதும் மதிப்புமிகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.